# புண்ணிய பழம்பதி முன்னேஸ்வரம்

இலங்கையின் மேற்குப்பாகத்தில் வடமேல் மாகாணத்தில் சிலாபம் எனும் நகருக்கு கிழக்குத்திகையில் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் குருணாகல் வீதியில் பக்தர்களுக்கு அருள்பாலித்து விளங்கும் புண்ணிய பழம்பதி முன்னேஸ்வரமாகும்.

இத்தலத்தின் பெயர் முன்னேசுவரம், முன்னேஸ்வரம், முன்னீசுவரம், முன்னேச்சரம், முனீசுவரம் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. முன்தோன்றிய ஈஸ்வரம் என்ற பெருமையாலும்; பெயரறியா முனிவர்கள் வழிபட்டமையாலும்; முனிவர்க்கெல்லாம் பெருமுனியாம் சிவபெருமானின் ஈஸ்வரம் என்பதனாலும்; மிக நீண்ட காலம் பூஜிக்கப்பட்டமையாலும்; பிரம்மாவினால் முன்பு பூஜிக்கப்பட்டமையாலும்; சிறப்புமிக்கதாகப் போற்றப்படும் பஞ்ச ஈஸ்வரங்களான இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் எனும் ஐந்து ஈஸ்வரங்களுள் காலத்தால் முற்பட்டது எனும் காரணத்தாலும் இத்தலம் முன்னேஸ்வரம் எனும் சிறப்புப் பெயர் பெற்றுள்ளமையை நன்கு அறியலாம்.

வட மொழியிலே சிவமஹாபுராணத்து சனத்குமார சம்ஹிதையில் ‘அலகேஸ்வரம்’ என அழைக்கப்படும் இவ் சிவாலயம் ஸ்காந்த மஹாபுராணத்தின் உத்தரகாண்டத்தில் இடம்பெறும் தக்ஷிணகைலாச மஹாத்மியத்தில் 16ம், 17ம் அத்தியாயங்களில் முன்னேஸ்வர ஷேத்திரத்தின் ஆதிவரலாறு, ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மதோஷ விமோசனம் பற்றித் தெரிவிக்கின்றது. மேலும், பத்மாசல புராணம் தேவீஸ்தானங்களுள் ‘சிங்களத்தில் தேவமோஹனீ’ எனவும், பொதுவாக ‘ஸ்ரீலங்காபீட’ எனவும் அழைக்கப்படுகின்ற சாக்த பீடமாகவும் விளங்குகின்றது.

இத்தலத்தில் ஸ்ரீ வடிவாம்பிகா தேவி சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி அருளாட்சி செய்து வருகின்றார். புராணச் செல்வாக்கு பெற்று விளங்கும் திருக்கோவில் மரபுகளில் இத்தலம் மூர்த்தியாக முன்னைநாத சுவாமியையும், ஸ்தலமாக முன்னேஸ்வரத்தையும், தீர்த்தமாக மாயவன் ஆற்றையும் (தெதுறு ஓயா), விருட்சமாக அரசமரத்தினையும் கொண்டு விளங்குகின்றது.

சிவபூமி என திருமூலரால் திருமந்திரத்தில் (௨747) போற்றப்படுகின்ற இலங்கை மிக நீண்டகாலமான சைவப்பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றது. சைவாகமங்கள் பூமியின் பண்புகளை பன்னிருவிதமாக பகுத்துக் கூறுகின்றது. அவற்றுள் ‘கொங்குமரம், மருதை, அரசு, விளா, அசோகம், அச்சாமரம், நிலத்தாமரை, துளசி, அறுகு, விஷ்ணுக்ராந்தி, எலிக்காதுக்கீரை, இலவு, மலை, நன்னாரி, புறா, கிளி, அன்னம்

என்பற்றால் வியாபிக்கப்பட்டதும் சுபத்தைத்தருவதுமே சைவபூமி’ என காமிகாகமம் சித்தரிக்கின்றது. இதனூடே சைவமரபும் சிவபூமியில் பண்பு ஒன்றிணைவதை உணர முடிகின்றது. இதே கருத்தினை T.A கோபிநாதராயோ ‘ இராமாயணத்தில் இலங்கையில் இருந்த கோயில்களைக் கூறுவதைச் சுட்டிக்காட்டி தென்னிந்தியாவில் தெய்வத்திருவுருவங்கள் கோயில்கள் இருந்தன’ எனும் கருத்தும்; தமிழகத்தில் சைவம் இருந்தபோதும் திருமூலர் இலங்கையையே சிவத்தலங்கள் மிகுதியாக உடைய சிவபூமியாகச் சுட்டுகின்றார் என்பதுவும் நோக்குதந்குரியன. இதன்மூலம் தக்ஷிணகைலாச மஹாத்மியத்தில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றதும் இராமாயணத்தோடு தொடர்புறுகின்றதுமான முன்னேஸ்வரத்தின் சிறப்பு மேலும் சிறப்புப் பெறுவதனை அவதானிக்க முடிகின்றது.

கேள்வியுற்றாலே எல்லா சித்திகளையும் அளிக்கவல்ல இத்தலத்தில் சுயம்புவாக விளங்கும் பரிபூரணரான சிவசங்கரர் எல்லோருக்கும் இட்ட சித்தியை அளிப்பதன் பொருட்டு எப்பொழுதும் சாந்நித்யமாக இருந்து மனிதர்களை ஜீவன் முக்தர்கள் ஆக்கின்றார்.

இத்தலத்திற்குரிய ஐதீகக் கதைமரபுகள் பல காணப்படுகின்றன. அவை வடிவழகியம்மை பற்றியதும், சந்திர குலத்து அருச்சுனன் மனைவி அல்லிராணி சிலாபத்தில் முத்துக்குளிக்கும் காலத்தில் மூன்றில் ஒரு பகுதியை அளித்தது பற்றியதுமான கதைகளாகும்.

இவ்வாலய வரலாற்றுப் பின்னணியில் ஸ்ரீராமசுவாமி ஸ்ரீவியாசமுனிவர் பூஜித்து பேறுபெற்றதை அறிந்த குளக்கோட்டன் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்வித்துள்ளான். ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி.1410 – 1462) இவ்வாலயத் திருப்பணிகளைச் செய்ததோடு 64 கிராமங்களையும் சிலாசாசனம் அளித்துள்ளான்.இதனை ஆலயக் கர்ப்பக்கிருகத்தின் அடிப்பாகத்தில் இன்றும் காணலாம். இச் சாசனத்தை ஜீ.எம்.பௌலர் என்பவர் முதலில் வாசிக்க கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை சில திருத்தங்களுடன் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார். ஓன்பதாம் பராக்கிரமபாகு மன்னனும் (கி.பி.1509 – 1528) கி.பி.1517ல் இக்கோவிலுக்கு சில கிராமங்களை தாமிரசாசனம் செய்துள்ளான்.

காலந்தோறும் பல புலவர்களால் பாடப்பட்டு வருகின்ற இவ்வாலயத்தின் வரலாற்றுச் செய்திகள் எங்கும் பரந்து காணப்படுகின்றன. எனினும் ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம், ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு ஆகிய நூல்கள் இவ்வாலய வரலாற்றின் முக்கிய அம்சங்களினைச் சுட்டி நிற்பனவாக அமைந்து காணப்படுகின்றன.

அருட்சிறப்பும் செல்வச்சிறப்பும் இயற்கை வனப்பும் சிறப்புற ஒன்றுபொருந்தியிருக்கும் இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் கி.பி.1596 ல் முற்றுகையிட்டனர். ஆலயச்செல்வங்களையும் கிராமங்களையும் தமது மதத் தேவைகட்கு பயன்படுத்தினர் . அக்காலத்தில் இவ்வாலயச்சிறப்பு எவ்விதமாக மக்கள் நம்பிக்கையுடன் மிளிர்ந்தது என்பது பற்றியும் , அதனை போர்த்துக்கேயர் அழிப்பதற்கு

முற்பட்ட முறைமைகள் கட்டளைகள் பற்றியும் 29 டிசம்பர் 1606ல் ஆவணம் 127ல் ஐந்தாவதாக எழுதிய JESUIT ANNUAL LETTER ல்:

'சிலாபத்திலிருந்து ஒரு மைல் அப்பால் நன்கு பிரசித்திபெற்ற மிகவும் செல்வந்த நிலையிலுள்ள ஒரு கோவில் உள்ளது. அக்கோவில் 106 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. அது மிகவும் வணங்கப்பட்டதாக அங்குள்ளவர்கள் தங்களுடைய தெய்வம் அங்கேயே தோன்றியதாக நம்புகின்றனர்.இத்தெய்வம் ஒரு கல்லினது பாறையாக பளிங்கைப்போல மனிதனுடைய உயரத்திற்கு இன்னொரு மிகப்பெரிய சதுரக்கல்லுக்குமேல் வைக்கப்பட்டுள்ளது. அதனை லிங்கம் என கூறுகின்றார்கள். நான் இதனைப் புகழற்ற இகழத்தக்க கீழ்நிலையிலுள்ள தெய்வமென்றே கருதுகின்றேன். தளபதி இக்கோயிலை எங்களுக்கு கொடுத்தார்.மாகாணப்பாதிரியார் அங்குசென்று புனிதபோல் (st.paul) என்ற பெயரில் ஒரு கிறிஸ்தவ ஆலயம் கட்டுவதற்கு கட்டளையிட்டார்.அந்தக் கோவிலை தன்னுடைய பாணியில் மீளமைக்கவும் அப்புகழற்ற கல்லை அழிக்கவும் கட்டளையிட்டார். இக்கல் அந்தணர்களால் பேணப்பட்டு அழிக்க இயலாததாகவும் இத்தெய்வம் அங்கு தோன்றியதால் எவர்கள் அதில் கை வைக்கிறார்களோ அவர்களுக்கு தீய விளைவு ஏற்படும் எனவும் கூறினர். ஆனால் எதுவித தாமதமுமின்றி இரும்புத்துண்டங்கள் கோட்டையிலிருந்து அழிப்பதற்காக கொண்டுவரப்பட்டன. அந்த விக்ரஹம் கீழ்விழுத்தப்பட்டு அந்தணர்களால் மக்களுக்கு வழிநடத்தப்பட்ட பொய், மூடநம்பிக்கை , ஏமாற்றம் ஆகியன வெளிக் கொணருவதாக அமைந்தது.'

எனத் தெரிவிக்கப்படுகின்றது.

[THE CATHOLIC CHURCH IN SRILANKA THE PORTUGUESE PERIOD VOL- II BY .V.PERNIOLA.S.J.SRILAKA MAY 1991.P.254] .போர்த்துக்கேயரால் இவ்வாலயமும் கிராமங்களும் கூட மொனோசெரயோ, மொனுசேரம், முனிசரயோ, ரெமுனேசெரயோ என்றெல்லாம் அழைக்கப்பட்டது.

கண்டியில் ஆட்சிசெய்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் (கி.பி.1741 – ) கி.பி.1753ல் திருப்பணிகள் மூலம் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்வித்ததோடு ஆலய நித்திய நைமித்திய பூஜைகளுக்காக குருமாருக்கு 32 அவுண் நெல்லினங்களை செப்புப்பட்டயம் எழுதிக்கொடுத்தான்.

தற்பொழுது சிவஸ்ரீ.கா.இ.குமாரசாமி குருக்கள் அவர்கள் தலைமையில் பரிபாலிக்கப்பட்டு சிறப்புற விளங்குகின்ற இத்தலத்தை 1875ல் சிவஸ்ரீ நா.குமாரசுவாமிக் குருக்கள் பெரும் திருப்பணி செய்துவைத்து கும்பாபிஷேகமும் செய்துவைத்தார். தொடர்ந்து 1919, 1963, 1991, 2005 ஆகிய ஆண்டுகளிலும் திருப்பணிகள் கும்பாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றன. தொன்றுதொட்டே சிவாகம முறைப்படி நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வருகின்றன.

இத்தலத்தில் தினமும் ஆறுகாலப் பூஜைகள் நேரம் தவறாமல் நடைபெற்று வருகின்றன. வார, பக்ஷ, மாச விஷேஷங்களுள் பிரதோஷ பூஜையும் சாக்ததந்திர முறைப்படி பௌர்ணமி தினங்களில் நடைபெற்றுவரும் ஸ்ரீ சக்ர பூஜையும் சிவராத்திரி, கார்த்திகை சோமவாரம், திருவெம்பாவை ஆகியனவும் சிறப்பு மிக்கன.

முன்னேஸ்வரத்திற்கே உரிய சிறப்புக்களுடன் வருடந்தோறும் வடிவழகி அம்பாளுக்கு நடைபெற்றுவரும் வசந்த நவராத்திரியில் சண்டிஹோமம் , அபிஷேகம், ஸ்ரீசக்ரபூஜை என்பனவும் சாரதா நவராத்திரியில் 108 சங்காபிஷேகமும் ஸ்ரீ சக்ர பூஜையும் எங்கும் காணக்கரிய சிறப்புமிக்கன. தைப்பூசத்தை இறுதிநாளாகக் கொண்ட 15 தின லக்ஷார்ச்சனையும் குறிப்பிடத்தக்கது.

இங்கு மாசிமாதத்தில் பௌர்ணமியை இறுதிநாளாகக் கொண்ட ஒன்பது தின பிரமோற்சவமும் ஆவணிமாத பௌர்ணமியை இறுதிநாளாகக் கொண்ட 27 தின மகோற்சவமும் சிறப்புடையன. இவ் உற்சவத்தை ஸ்ரீமத் உத்தமகாரணாகமம் சாகல்யம் எனவும் சௌக்யத்தைக் கொடுக்கக்கூடியது என்றும் உத்தமமானது என்றும் சௌரம் என்றும் கூறுகின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் பஞ்ச கிருத்தியங்களையும் ஆன்மாக்களுக்கு உணர்த்தி சாம்பவீ தீக்ஷை அளிக்கும் சிறப்புடைய மஹோத்சவம் இவ்வருடம் ஓகஸ்ட் 16 (16.08.2011) செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

சிவாகம விதிமுறையின்படி ஆலயத்தின் கருவறையில் உள்ள மூலவர் ‘உற்சவ மூர்த்தி’ என்ற பெயருடன் ஆலயத்திலிருந்து வெளிப்புறத்தில் வெளிவருவதற்கு ‘உற்சவம்’ என்பது பெயர். ஸ்வாமி வீதியில் வருவதால் ஆன்மாக்களுக்கு அவற்றின் பாபபுண்ணியங்களுக்கு ஏற்ப தனு – கரண – புவன – யோகங்களைத் தோற்றுவித்து கிரமமாக சிருஷ்டி, ஸ்திதி, லயம், திரோபவம், அநுக்கிரஹம் எனும் பஞ்ச கிருத்தியங்களையும் ஆன்மாக்கள் உய்ய இறைவன் செய்கின்றார்.

இத்தகைய சிறப்புடைய உற்சவகாலத்தில் ஆன்மாக்களுக்கு அருளும் கோலமுடைய பரம கருணாநிதியாகிய இறைவன் தடத்த லக்ஷணமாக குணங்குறிகளேற்று விளங்கும் வடிவங்கள் சிறப்புடையன. இத்தகைய வடிவங்களுள் சிவனின் மூர்த்திபேதங்கள் பலவற்றுள் சிவாகமங்கள் கூறும் மூர்த்திபேதங்கள் இருபத்தைந்து ஆகும். இவை சிறப்பானவை. இவற்றுள் சிருஷ்டி மூர்த்தமாக விளங்கும் சோமாஸ்கந்த மூர்த்தியே விருஷபாரூடராக சிம்ம வாகனத்தில் எழுந்தருளும் வடிவழகி அம்மையுடன் விநாயகர், சுப்ரமணியர், வள்ளிதேவசேனா சக்தியுடனாகவும், கஜவல்லி மகாவல்லியுடன் சிவசண்முகப் பெருமான், அஸ்திரதேவர், சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகள் காலையிலும் ; மாலையில் விநாயகர், வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், அஸ்திரதேவர், சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகள் திருமஞ்சத்திலும் திருவீதியுலாவரும் சிறப்பு இத்தலத்திற்கேயுரிய தனித்துவமான சிறப்பம்சமாகும்.

கிராமம் கிராமமாக பழைமையான பாரம்மரியப்படி உபயம் செய்யும் சிறப்பும் இறைவனுக்கு சேவை புரியும் மரபு வியக்கவைக்கும் சிறப்புமிக்கது.

முன்னேஸ்வரத்து ஆவணிமாத மஹோத்சவத்தின் சிறப்பு உற்சவங்களாக 04.09.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ விநாயகர் உற்சவம், 05.09.2011 திங்கட்கிழமை மாலை ஸ்ரீ சுப்பிரமணியர் உற்சவம், 06.09.2011 செவ்வாய்க்கிழமை மாலை ஸ்ரீ மஹாவிஷ்ணு உற்சவம், 07.09.2011 புதன்கிழமை மாலை தீமிதிப்பு உற்சவமும் இரவு சிவபக்தோற்சவமும், 08.09.2011 வியாழக்கிழமை மாலை ஸ்ரீ பிக்ஷாடனர் உற்சவம், 09.09.2011 வெள்ளிக்கிழமை ஸ்ரீ நடேசர் உற்சவம், 10.09.2011 சனிக்கிழமை மாலை வேட்டைத்திருவிழாவும், இரவு சப்பரத்திருவிழாவும் நடைபெறும்.

மஹாரதோற்சவம் 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்று பகல் 09.15 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று தேரில் எழுந்தருளுவர். புகல் 12.00 மணிக்கு பஞ்சரதங்களிலும் சுவாமி வீதிவலம் வருவார்.பஞ்சரதபவணி நிறைவடைந்ததும் பச்சைசாத்திய இறைவனின் திருக்கோலக்காட்சி சிறப்புமிக்கது.

தீர்த்தோற்சவம் 12.09.2011 திங்கட்கிழமை மாயவன் ஆற்றில் நடைபெற்று அன்னதானமும் அடியார்களுக்கு அருள்பாலித்த இறைவன் பட்டணப் பிரவேசத்தின் இறுதியில் உதயத்தின் முன் துவஜாவரோகணமும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 14.09.2011 புதன்கிழமை காலை அடியார்கள் தமது நேர்த்திகளை செய்து முடிக்கின்ற பாற்குட பவணியும், இரவு திருக்கல்யாணம் பூங்காவன உற்சவம் என்பன நடைபெறும். 15.09.2011 வியாழக்கிழமை இரவு சண்டேசுவரர் உற்சவமும், 16.09.2011 வெள்ளிக்கிழமை பகல் மஹோத்சவ பிராயச்சித்த அபிஷேகமும், 17.09.2011 சனிக்கிழமை இரவு வைரவர் சாந்தி பூஜையும் இடம்பெற்று மஹோத்சவம் இனிதே நிறைவு பெறும்.

சிறப்புமிக்க மஹோத்சவ காலங்களில் இன, மத, மொழி பேதங்கடந்து அனைவருக்கும் அருள்சுரக்கும் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதப் பெருமானின் அருள் பெற்று நிற்பது எல்லோருக்கும் ஆனந்தத்தை அளிக்கின்றது.

வேண்டும் வேண்டும் வரங்களை வாரிவழங்கும் ஸ்ரீ வடிவாம்பிகை அம்பிகையுடனுறை ஸ்ரீ முன்னைநாதப் பெருமானை நாம் அனைவரும் வழபட்டு இறைவனின் திருவுலாக்காட்சிகளைக் கண்ணாரக்கண்டு மக்கள் அனைவரும் சுகமாக வாழவும் இறைவனின் திருவருளையும் நல்லாசிகளையும் பெற்று இன்புற்று இருப்போமாக!

"இலகுபுகழ் முனீசுரததிலிருந்தான் றன்னை

யென்னாளுந் துதிசெய்தே யிறைஞ்சு நெஞ்சே"

முனீசுவரர் திருத்தாண்டகப் பண்